1970 மார்ச் 24]

மிகவும் வரவேற்கத்தகுந்ததே. அந்தக் குழுவின் அறிக்கையின் மீது அரசு முடிவு எடுப்பதற்கு முன், அதனை இந்த மன்றத்தில் வைத்து விவாதிக்க முதலமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மன்றத்திலே விவாதிப்பது கூட, பிறகு இருக்கலாம். ஆனால் அதிலே வேதனையான சம்பவம் ஒன்று என்னவென்றால், இந்தக் குழுவின் வினாத்தாள்கள், தமிழகத்தில் உள்ள எல்லா சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி 1,700 பேர்களுக்கு வினாத்தாள்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் திருப்பியனுப்புவதற்குக் கடைசி நாள் 31—3—1970 ஆகும். இன்னும் ஏழெட்டு நாட்கள்தான் இருக்கின்றன. வந்திருக்கிற பதில்கள் நான்கு பேர்களிடமிருந்து தான்.

திரு. கே. விநாயகம்: உலகத்திலேயே போலீஸ் துறையிலே நல்ல பணி செய்பவர்கள் என்று பிரசித்திபெற்றது லண்டன் போலீஸ் தான் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குழுவை இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்பி, அங்கு எப்படி நடக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்து, அது நம்முடைய நாட்டுக்குப் பொருந்துமா என்பதை விசாரித்து, பிறகு அறிக்கையை நமக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று இப்போதாயினும் அவர்களுக்குத் தாக்கீது அனுப்புவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உலகத்திலேயே தமிழ் நாட்டுக் காவல் துறை தான் சிறந்த காவல் துறை என்று சொல்லப் படுகிறது. (திரு. கே. விநாயகம்: இந்தியாவில்) இந்தியாவில் என்று சொல்கிறார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள், நம்முடைய தமிழ்நாட்டிலிருக்கிற காவல் துறை மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பார் என்று கருதுகிறேன். அந்தக் குழுவின் அறிக்கை விரைவில் வரவேண்டும் என்று எல்லோரும் கருதுகிறபோது, என்ன காரணத்தினாலோ— மறைமுகமாக—தாமதமாக வேண்டும் என்று யோசனை சொல்லுகிறார்.

திருப்பூர் நகரில் கூடுதல் காவல் நிலையங்கள்

* 511 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் காவலர் நிலைய எண்ணிக்கையை அதிகரிப்பது சம்பந்தமாக திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து 21—3—1968-ல் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) அண்மையில் 17—3—1970-இல், இக்கோரிக்கையைத் தற்பொழுது ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை என அரசு அறிவித்துள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அதையடுத்த பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய இடங்களில் மூன்று மூன்று காவலர் நிலையங்கள் இருக்கின்றன. கோவை மாவட்டத் தலைமைப் போலீஸ் அதிகாரியையும், பிராந்தியப் போலீஸ் அதிகாரியையும் இதுபற்றிக் கேட்ட நேரத்தில், 'நாங்கள் சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறோம். இன்னும் முடியவில்லை' என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சரவர்கள் இதை மனத்திலே கொண்டு புதிய காவல் நிலையமொன்றைத் திருப்பூரில் அமைக்க விரைவில் உத்தரவிடுமாறு மிகப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விரைவில் நம்முடைய நிதி நிலையில் வசதியான காலம் வரும். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை நிச்சயமாக உருவாகும்.

Kilpauk Medical College

*512 Q.—DR. H. V. HANDE : THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the Minister for Education and Health be pleased to state the reasons for running the Kilpauk Medical College as a women's institution exclusively?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மகளிர்க்கென தனிக் கல்லூரியாக இயங்குவதற்கான தனிச் சிறப்பான காரணங்கள் ஒன்றும் இல்லை. இது அரசாங்கம் வகுத்த ஒரு கொள்கையாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றநேரத்தில் அரசாங்கம் வகுத்த கொள்கை என்று சொன்னார்கள். ஏனைய கல்லூரிகளில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கும் இந்தக் காலத்தில் பெண்களுக்கு என்று தனியாக இயங்குவதற்கான கொள்கையை வகுத்த காரணம் என்ன? வேறு இடங்களிலும் இதைப்போன்று மகளிர்க்கென மேலும் கல்லூரிகளை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டு வரையிலும் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியில் ஆடவர், பெண்டிர் இருபாலரும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். நியூ டெல்லியிலே, லேடி ஹார்டிஞ்ஜ் மருத்துவக் கல்லூரி இருக்கிறது. அதில் பெண்கள் மட்டும் சேர்ந்து பயிலுகிறார்கள். அதை